[27th July 1964

கனம் திரு. வெ. ராமையா : தண்ணீர் இருந்தால்தான் மைசூர் சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்த முடியும். காவேரி காச்மெண்ட் ஏரியாவில் மழை கம்மியாக இருந்தது என்பதுதான் நான் இப்பொழுது சொன்ன விவரம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தண்ணீர் குறைவாக இருப்ப தினால், 'போரிங்' முதலியவைகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பல திட்டங்களை வகுத்து பல கோடிக்கணக்கான ரூபாய் செல வழித்த போதிலும், அவைகள் நல்ல விதமாக இயங்குவதற்கு அரசாங்கம் கவனிப்பதற்கு ஏற்பாடு செவார்களா?

கனம் திரு. வெ. ராமையா : தஞ்சை ஜில்லாவிலிருந்து வரக் கூடிய கனம் அங்கத்தினர் தஞ்சை ஜில்லாவில் போரிங் கிணறுகள் அமைப்பது நலமாக இருக்கும் என்ற ஒரு முடிவுக்கு வந்தது குறித்து எனக்குச் சந்தோஷம். தஞ்சை ஜில்லாவில் இருக்கக் கூடிய பாசன ஆதாரங்களை இன்னும் முறையாகச் சீர்படுத்துவதற் கும், அதை விவசாயத்திற்கு நல்ல முறையில், தக்க முறையில் பாசனம் செய்வதற்கும் ஒரு பெரிய திட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். அது சம்பந்தமாக நமது மாகாணத்தில் இருக்கக்கூடிய நிபுணர்கள் மட்டுமல்ல, தேவைப்பட்டால் வெளி நாட்டிலிருந்து கூட நிபுணர் கள் வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அந்த முறையில் தான் கடந்த ஒரு சில தினங்களாக தஞ்சை ஜில்லாவில் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு சில நிபுணர்கள் அந்தப் பாசன ஆதாரங்களையெல்லாம் பார்த்து வருகிறார்கள்.

திரு. எம். தண்டாயுதபாணி : காவேரியில் வந்து கலக்கிற உப நதிகளில் மைசூர் அரசாங்கத்தார் அணை கட்டிவிடுகிற காரணத் தினால், காவேரியில் தண்ணீர் அதிகமாக வருவதில்லை என்று குறிப்பிடப்படுகிறது. அது உண்மையா? அதற்கு நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா : அது போன்ற விவரம் என்னிடம் இல்லை.

Highways Research Station

* 648 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether recruitment to the post of a Research Assistant in the Directorate of Highways Research Station was made during the closing months of 1962; and

(*b*) the rules of recruitment for the same?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No recruitment was made towards the end of the operation year 1962–63. However a Research Assistant was posted in October-November 1962 after re-arranging the existing posts.

(b) Direct recruitment; or

(ii) Recruitment by transfer from any other service; or

(iii) Promotion from among Field Assistants with not less than five years service; or

(iv) Recruitment from among persons borne on the work-charged establishment in the Highways Rsearch Station, Madras.

(v) Must possess a first or second class B.Sc., or B.A. degree of any University or institution recognized by the University Grants Commission for the purposes of its grant, with Chemistry, Physics, Mathematics or Geology as the main subject.

* 649 Q.—Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the number of women employed in the Directorate of Highways Research Station, Madras, their age at the time of appointment, qualifications and the mode of appointment; and

(b) the nature of the posts to which they were appointed and the position they are occupying now?

The Hon. Sri V. RAMAIAH : (a) & (b) Two women were employed in the Directorate of Highways Research Station, Madras. Their ages at the time of appointment were 24 and 19. The woman recruited for appointment to the post of Research Assistant possesses the degree of B.Sc. (Chemistry) II Class, Knowledge of French and working of Library. The other recruited for appointment to the post of Laboratory Assistant has passed Pre-University Course. Both were recruited outside the scope of employment exchange, as these two posts belong to workcharged establishment. The women have since resigned.

மேம்பாலம் கட்டுதல்

* 653 கேள்வி.—திரு. ந. ப. செங்கோட்டுவேலு : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட தலைநகரங்களில் உள்ள முக்கியமான இடங்களில் மேல் பாலம் கட்டும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஆம்.

திரு. மா. இராசங்கம் : மதுரையில் போக்குவரத்திற்குத் தடையாக இருக்கிற திருப்பரங்குன்றம் நெடுஞ்சாலையில் உள்ள மீனாட்சி மில்ஸ் கேட், சுப்ரமணியபுரம் கேட் ஆகியவைகளுக்கு மேம்பாலம் அமைக்க அரசாங்கம் எடுத்திருக்கிற முயற்சி யாது ? அந்த முயற்சி எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்கெல்லாம் முயற்சி எடுத்து, திட்டங்கள் கூட உருவாக்கி, நடத்த வேண்டிய நேரத்தில் தேசிய நெருக்கடி காரணமாக, போதுமான நிதி இல்லை. ஆகையால்